# ஆண்டறிக்கை - 2023

## தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

அலுவலகம்

தகவலுக்கான உரிமை ஆணைக்குழு
அறை இல. 203 – 204, கட்டட இலக்கம் - 2
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
பௌத்தாலோக்க மாவத்தை
கொழும்பு 07
இலங்கை

தொலைபேசி இல - 0112691625
info@rtic.gov.lk
www.rticommission.lk

-

## உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| **1** | **முன்னுரை** | | |
| | 1.1 | தகவல்களை அணுகுவதற்கு பிரசைகளுக்குள்ள அடிப்படை உரிமை | 3 |
| | 1.2 | தகவலுக்கான உரிமைச் சட்டம் | 3 |
| | 1.3 | தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 4 |
| | 1.4 | ஆணைக்குழுவின் தூரநோக்கு | 5 |
| | 1.5 | ஆணைக்குழுவின் குறிக்கோள் | 5 |
| | 1.6 | ஆணைக்குழுவின் இலக்குகள் | 5 |
| **2** | **ஆணைக்குழுவின் கடமைகள், பணிகள் மற்றும் தத்துவங்கள்** | | |
| | 2.1 | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பணிகள் | 6 |
| | 2.2 | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் தத்துவங்கள | 6 |
| | 2.3 | சமகால தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 7 |
| **3** | **ஆணைக்குழுவின் செயலாற்றுகை** | | |
| | 3.1 | மேன்முறையீடுகள் கிடைக்கப்பெறுதல் | 8-11 |
| | 3.2 | மேன்முறையீடுகளை விசாரணை செய்தல் | 11-12 |
| **4** | **தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தலையீடுகள்** | | |
| | 4.1 | உள்நாட்டு தலையீடுகள் | 13 |
| | 4.1.1 | அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள | 13 |
| | 4.1.2 | அரச நிறுவனங்கள் தொடர்பில் ஆணைக்குழு உறுப்பினர்களின் வளப் பங்களிப்பு | 14 |
| | 4.1.3 | முற்போக்கான தகவல்களை வெளியிடுதல் | 15 |
| | 4.2 | சர்வதேச மாநாடுகள் | 15 |
| **5** | **ஆணைக்குழுவின் நீதிமன்ற அலுவல்கள்** | | 16-33 |
| **6** | **அறிக்கை சமர்ப்பித்தலின் போது பகிரங்க அதிகாரசபைகளின் பொறுப்புக்கள்** | | 34-41 |
| **7** | **தகவல்களுக்கான அணுகல் தொடர்பான சர்வதேச தினத்தைக் கொண்டாடுதல்** | | 42 |
| **8** | **நிர்வாகம் மற்றும் நிதிசார் செயலாற்றுகை** | | |
| | 8.1 | ஆணைக்குழுவின் பதவியணியினர் | 43 |
| | 8.2 | நிதிக்கட்டுப்பாடு | 43-52 |

# 1. முன்னுரை

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டிற்கான முழு செயற்றிறன் பின்வருமாறு:

## 1.1 தகவல்களை அணுகுவதற்கு பிரசைகளுக்குள்ள அடிப்படை உரிமை

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 19 ஆம் இலக்க அரசியலமைப்பு சீர்த்திருத்தத்தின் பிரகாரம் 14(அ) எனும் புதிய சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை அணுகுவதற்கு பிரசைகளுக்குள்ள அடிப்படை உரிமை என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.2 தகவலுக்கான உரிமைச் சட்டம்

தகவல்களுக்கு பிரவேசிப்பதற்கு உள்ள உரிமையை உறுதி செய்தல்,தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமையை நடைமுறைப்படுத்தல் ஊடாக பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மை,பொறுப்புக் கூறும் பண்பாட்டைப் பேணிவளர்ப்பதற்கான தேவைப்பாடு, மற்றும், இலங்கை மக்களின் நல்லாட்சியை மேம்படுத்துவதன் ஊடாக நாட்டின் பொது வாழ்வில் செயற்றிறனாக பங்கேற்கக்கூடிய சமூகமொன்றை உருவாக்குவதற்காக, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவைத் தாபிக்கும் நோக்குடன், இலங்கைப் பாராளுமன்றத்தினால் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கௌரவ சபாநாயகரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

அச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம், 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பகிரங்க அதிகாரசபையின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை அணுகுவதற்கான உரிமை சகல பிரசைகளுக்கும் இருப்பதாக சட்டரீதியான ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க அதிகாரசபை என்பதற்கான பொருட்கோடல் பின்வருமாறு உள்ளது:
பகிரங்க அதிகாரசபை என்பது

1. அரசாங்கத்தின் ஓர் அமைச்சு
2. பந்தி (உ) வில் குறித்துரைக்கப்பட்ட அந்தளவிற்கு தவிர 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் கீழ்,ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால்,அல்லது, சட்டத்தின் கீழ் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால், அல்லது, அதன் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் குழு அல்லது பதவி
3. ஓர் அரசாங்கத் திணைக்களம்
4. ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம்
5. எந்தக் கம்பனியில், அரசு அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசும் பகிரங்கக் கூட்டுத்தாபனமும் பங்குகளின் இருபத்தைந்து சதவீதத்தை(25%) அல்லது அதற்கு மேற்பட்டவற்றை ஒன்றாக வைத்திருக்கின்றனவோ அல்லது வேறு வகையில் கட்டுப்படுத்துகின்ற அக்கறையைக் கொண்டுள்ளனவோ, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அந்தக் கம்பனியொன்று
6. ஓர் உள்ளூர் அதிகாரசபை

7. அரசாங்கத்திடமிருந்து அல்லது அதன் முகவராண்மையிடமிருந்து அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்றிடமிருந்து ஒப்பந்தம்,பங்காண்மை உடன்படிக்கை அல்லது உரிமமொன்றின் கீழ் நியதிச்சட்ட அல்லது பகிரங்கப் பணி அல்லது ஒரு நியதிச்சட்ட அல்லது பகிரங்கச் சேவையை நிறைவேற்றுகின்ற தனியாள் அமைப்பு அல்லது ஒழுங்கமைப்பொன்று.ஆனால், நியதிச்சட்ட அல்லது பகிரங்க பணி நியதிச்சட்ட அல்லது பகிரங்கச் சேவையினால் உள்ளீர்க்கப்படும் தொழிற்பாடுகளின் அந்தளவிற்கு மட்டும்.
8. ஒரு மாகாணசபையால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் திணைக்களம் அல்லது வேறு அதிகார சபை அல்லது நிறுவனம்.
9. நாடப்படும் தகவல் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவையுடன் தொடர்புறும் அந்தளவிற்கு பொதுமக்களுக்கு சேவையை வழங்குகின்ற அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் திணைக்களத்தினால் பெருளளவில் நிதியளிக்கப்படுகின்ற அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் அல்லது மாகாணசபையொன்றினால் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட வேறு அதிகாரசபை
10. ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற,அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட முறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்தொழில் நிறுவனங்கள் உள்ளடங்கலான உயர்கல்வி நிறுவனங்கள்
11. ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அத்துடன் அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட முறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் அல்லது தொழிநுட்பக் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கலான தனியார் கல்வி நிறுவனங்கள்
12. நீதி நிருவாகத்திற்கென உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட எல்லா நீதிமன்றங்கள், நியாயசபைகள் மற்றும் நிறுவனங்கள்

## 1.3 தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவானது 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட பிரிக்கப்படாததொரு பொதுவான முத்திரையுடன் கூடிய நியதிச்சட்ட அமைப்பாகும். அதனடிப்படையில்,ஆணைக்குழுவிற்கு முதன்முறையாக 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.பகிரங்க அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.இச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.மேலும் 39(1)(உ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு இணங்கத் தவறும் பட்சத்தில் அல்லது மறுக்கும் தரப்பினருக்கு எதிராக குற்றவியல் வழக்குத் தொடர்வதற்கான அதிகாரமும் ஆணைக்குழுவிற்கு உண்டு.

அதேபோல் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதம்,விசாரணையின் போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் மற்றும் தகவல்களை வழங்குதல் தொடர்பிலான கட்டணங்கள் பற்றிய சட்ட ஒழுங்கு விதிகளைத் தயாரிப்பதற்கான உரித்தும் ஆணைக்குழுவிற்கு உண்டு.அதற்கிணங்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2004/66ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில்

கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை தொடர்பிலான சட்டவிதிக்கோவையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.4 ஆணைக்குழுவின் தூரநோக்கு

இலங்கைப் பிரசைகளுக்கு தங்களின் தகவலுக்கான உரிமையை வினைத்திறனாக நடைமுறைப்படுத்த முடியும் என்பதை உறுதிசெய்தல்.

## 1.5 ஆணைக்குழுவின் குறிக்கோள்

சகல இலங்கைப் பிரசைகளினதும் தகவலுக்கான உரிமையை மேம்படுத்தி பாதுகாப்பளிப்பதன் ஊடாக வினைத்திறனான தீர்ப்பு வழங்குதல் மற்றும் சகல பகிரங்க அதிகாரசபைகளின் செயற்பாடுகளையும் கண்காணிப்பதன் ஊடாக வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சிப் பண்பாடொன்றை ஊக்குவித்து தமக்கு உரித்தான சகல தகவல்கள் தொடர்பிலும் பிரசைகளை அதிகளவு விழிப்புணர்வுடன் வழிகாட்டி முற்போக்கான வெளிப்படுத்தல்களை மேம்படுத்தல்.

## 1.6 ஆணைக்குழுவின் இலக்குகள்

- உச்ச வினைத்திறனான வகையில் தீர்ப்பளித்து அவற்றை அமுலாக்கல்: பகிரங்க அதிகாரசபை மற்றும் தகவல் கோரிக்கையாளர்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகளுக்கு வினைத்திறனான முறையில் தீர்ப்பளித்தல்.
- அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கல்: அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வேளையில் ஒத்துழைப்புடன் செயற்படுதல், ஆர்வம் காட்டும் தரப்பினர்களின் தகவல் அறியும் உரிமை தொடர்பான விசேட பயிற்சிக்கு ஒத்துழைப்பை வழங்குதல்.
- பொது மக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துதல்: ஆணைக்குழுவின் இணையத்தளம் மற்றும் ஊடகத் தொடர்பு மூலம் தகவலுக்கான உரிமை தொடர்பான சட்டம் தொடர்பில் பொது மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்தல்.
- அறிக்கையிடல் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்: வழிகாட்டுதல்கள் வழங்குவதன் ஊடாக தகவல் முகாமைத்துவம் தொடர்பில் குறிப்பிடத்தக்க அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- முற்போக்கான தகவல் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தல்: வழிகாட்டுதல்கள் வழங்குதல், குறைந்த பட்ச தரங்களை குறித்துரைத்தல், தற்போதைய சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவரல், மற்றும் காலத்திற்குக் காலம் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- வினைத்திறன் வாய்ந்த கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பைத் தாபித்தல்: உகந்த நிகழ்நிலைத் தீர்வுகள் மற்றும் மதிப்பீட்டுக் கருவிகளை உபயோகிப்பதன் மூலம் பகிரங்க அதிகாரசபைகளால் தகவலுக்கான உரிமை தொடர்பான சட்டம் வினைத்திறனாக நடைமுறைபடுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

# 2. ஆணைக்குழுவின் கடமைகள், பணிகள் மற்றும் தத்துவங்கள்

## 2.1 தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் கடமைகளும் பணிகளும்

- இச் சட்டத்தின் கீழ் பகிரங்க அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடமைகள் சரியாக நிறைவேற்றப்படுகின்றதா என்பதை கண்காணித்தல் மற்றும் அதற்கு இணங்க செயற்பாடுகள் இடம்பெறுகின்றதா என்பதை உறுதிசெய்தல்.
- சீர்திருத்தத்தை மீளாய்வு செய்வதற்கு அவசியமான பொதுவான பரிந்துரை மற்றும் பகிரங்க அதிகாரசபைக்கு பணிக்கப்பட்ட பரிந்துரை ஆகிய இரண்டு வகையான பரிந்துரைகளையும் மேற்கொள்ளல்.
- இச் சட்டத்தின் கீழ் தகவலொன்றை விடுவிக்கும் பொருட்டு பகிரங்க அதிகாரசபையால் அறவிடப்படும் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு நியாயமான முறையில் வழிகாட்டிகளை வெளியிடல்.
- தகவல் உத்தியோகத்தரொருவரால் கட்டணம் அறவிடாமல் தகவல் வழங்க முடியுமாகவிருப்பது எச் சந்தர்ப்பங்களில் என்பதை நிர்ணயித்தல்.
- தகவல் வழங்குதல் தொடர்பில் முற்போக்கான வெளிப்படுத்தல் கொள்கையின் அடிப்படையில் அமைந்த கட்டண அட்டவணையொன்றை நிர்ணயித்தல்.
- இச் சட்டத்தின் விதிகளை வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுத்துவது தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தல் அல்லது அத்தகைய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இச் சட்டத்தின் அவசியம் மற்றும் சட்டத்தின் கீழ் நபர்களின் உரிமைகளைப் பகிரங்கப்படுத்தல்.
- பகிரங்க அதிகாரசபைகள் தொடர்பில் அறிக்கைகளை முறையாக பேணுவதற்கான வழிகாட்டிகளை வெளியிடல்.

## 2.2 தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் தத்துவங்கள்

- விசாரணையை நடாத்துதலும் அவ்விசாரணைக்கு முன்னிலைப்படுத்துவதற்கு ஒரு நபரை நியமித்தலும்
- சத்தியப்பிரமானம் செய்தல் அல்லது உறுதிமொழியளித்தலின் கீழ் அந் நபரை விசாரணை செய்தல், மற்றும், தேவையான போது அந்த நபரின் கைவசமுள்ள எத்தகைய தகவலையும் வழங்குமாறு அந்நபருக்குக் கட்டளையிடுதல். ஆயினும், 5 ஆம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட தகவல்களை இரகசியமாக பரிசீலனைக்கு உட்படுத்துதல் வேண்டும்.
- இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனுமொரு பகிரங்க அதிகாரசபையால் நிராகரிக்கப்பட்ட தகவல்கள் உட்பட பகிரங்க அதிகாரசபையிடம் உள்ள தகவல்களைப் பரிசீலனை செய்தல்.
- ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் தகவல்களை வழங்குமாறு பகிரங்க அதிகாரசபைக்கு ஆணையிடுதல்.
- 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, எந்தவொரு பகிரங்க அதிகாரசபையினாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொது மக்களின் தகவல்களை வெளியிடுமாறு அத்தகைய பகிரங்க அதிகாரசபைக்கு ஆணையிடுதல்.
- 32 ஆம் பிரிவின் கீழ் அதிருப்தியுற்ற எந்தவொரு நபராலும் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்படும் மேன்முறையீட்டை விசாரணை செய்தல், மற்றும், தீர்மானம் மேற்கொள்ளல், மற்றும், கோரப்பட்டுள்ள தகவல்களை உரிய நேரத்திற்கு வழங்கமுடியாமை காரணமாக பிரசையொருவருடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்தை மீளச்செலுத்துமாறு பகிரங்க அதிகாரசபைக்கு அல்லது தகவல் உத்தியோகத்தருக்கு ஆணையிடுதல்.

## 2.3 தகவலுக்கான தற்கால உரிமை ஆணைக்குழு

சட்டத்தின் 12(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அரசியலமைப்புச் சீர்த்திருத்த விதப்புரையின் கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐவரை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.அத்தகைய விதப்புரைகளை மேற்கொள்ளும் போது, அரசியலமைப்புப் பேரவையினால் பின்வரும் ஒழுங்கமைப்புக்கள் அல்லது ஒழுங்கமைப்பின் வகைகள் ஒவ்வொன்றினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓருவரை விதந்துரைத்தல் வேண்டும்.

- ❖ இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் திறமை வாய்ந்த சட்டத்தரணியொருவரை அல்லது சட்டம்சார் கல்விமானொருவரை, சட்டத்தரணிகள் மற்றும் சட்டம்சார் கல்வியியலாளர்களுடனான கலந்தலோசனையில் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.
- ❖ வெளியீட்டாளர்கள்,பதிப்பாசிரியர்கள் மற்றும் ஊடக ஆட்களின் ஒழுங்கமைப்புக்கள், அத்துடன்
- ❖ வேறு சில சமூக ஒழுங்கமைப்புக்கள்

இச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் 2016.10.01 ஆம் திகதி முதலாவதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட ஆணையாளர்களின் முதல் 05 வருட காலமானது 2021.09.21 ஆம் திகதியுடன் முடிவுவடைந்துள்ளது.

2021.12.09 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் சமகால ஆணைக்குழுவின் தவிசாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேசேகர அவர்கள் மற்றும் ஆணையாளர்களாக ஓய்வுபெற்ற நீதியரசர் திருமதி ரோஹினி வல்கம,சட்டத்தரணி செல்வி கிசாலி பின்டோ ஜயவர்தன மற்றும் சட்டத்தரணி திரு ஜகத் லியன ஆராச்சி ஆகியோரும் 2022.09.20 ஆம் திகதி தொடக்கம் திருஏ.மொஹமட் நஹியா அவர்களும் பணியாற்றுகின்றனர்.

2023.04.06 ஆம் திகதி தொடக்கம் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக திரு.டி.சி.திசாநாயக்க பணியாற்றுகின்றார்.

# 3. ஆணைக்குழுவின் செயலாற்றுகை

## 3.1 மேன்முறையீடுகள் கிடைக்கப்பெறுதல்

சட்டத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம், 31(1) ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடுகள் தொடர்பில் வழங்கப்படும் தீர்மானங்களினால் பாதிப்புக்குள்ளாகும் நபர்களினால், அல்லது, 31(3) ஆம் பிரிவில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் தீர்மானம் வழங்கப்படவேண்டிய மேன்முறையீடுகளுக்குத் தீர்மானம் வழங்கப்படாமல் பாதிப்புக்குள்ளாகும் நபர்களினால், அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலப்பகுதி முடிவடைந்து இரண்டு மாதங்களினுள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீட்டினைச் செய்ய முடியும்.

2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவுக்கு 1688 மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதுடன் அவை கடந்த ஆண்டில் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகளை விட 163 அதிகமாகும். 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன:

**அட்டவணை 1 – மாகாண ரீதியான மேன்முறையீடுகளின் வகைப்பாடு**

| இல | மாகாணம் / ஆண்டு | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | **2023** |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு | 48 | 69 | 71 | 82 | 116 | **181** |
| 2. | வடமேல் | 26 | 77 | 34 | 21 | 73 | **99** |
| 3. | மேல் | 338 | 443 | 226 | 239 | 446 | **646** |
| 4. | வடமத்திய | 43 | 30 | 16 | 21 | 60 | **74** |
| 5. | மத்திய | 77 | 74 | 83 | 80 | 215 | **175** |
| 6. | சப்ரகமுவ | 35 | 64 | 30 | 63 | 67 | **95** |
| 7. | கிழக்கு | 75 | 113 | 112 | 30 | 168 | **150** |
| 8. | தென் | 143 | 188 | 145 | 268 | 352 | **225** |
| 9. | ஊவா | 15 | 31 | 12 | 21 | 28 | **43** |
| | மொத்தம் | 800 | 1089 | 729 | 825 | 1525 | **1688** |

**அட்டவணை 2 – மாவட்ட ரீதியான மேன்முறையீடுகளின் வகைப்பாடு**

| இல | மாகாணம் / ஆண்டு | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | **2023** |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | 212 | 323 | 161 | 197 | 342 | **454** |
| 2. | கம்பஹா | 97 | 73 | 52 | 30 | 71 | **136** |
| 3. | களுத்துறை | 35 | 47 | 13 | 12 | 33 | **56** |
| 4. | காலி | 90 | 113 | 58 | 47 | 96 | **134** |
| 5. | மாத்தறை | 21 | 44 | 29 | 14 | 59 | **48** |
| 6. | ஹம்பந்தோட்டை | 32 | 31 | 58 | 207 | 197 | **43** |
| 7. | கண்டி | 63 | 49 | 54 | 67 | 104 | **117** |
| 8. | மாத்தளை | 13 | 12 | 3 | 6 | 13 | **22** |
| 9. | நுவரெலியா | 2 | 13 | 26 | 9 | 98 | **36** |
| 10. | திருகோணமலை | 6 | 12 | 5 | 17 | 16 | **27** |
| 11. | மட்டக்களப்பு | 7 | 25 | 12 | 12 | 12 | **24** |
| 12. | அம்பாறை | 61 | 76 | 95 | 51 | 140 | **99** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13. | யாழ்ப்பாணம் | 26 | 49 | 44 | 41 | 62 | **77** |
| 14. | வவுனியா | 15 | 10 | 6 | 4 | 19 | **38** |
| 15. | மன்னார் | 5 | 2 | 3 | 5 | 9 | **16** |
| 16. | கிளிநொச்சி | 1 | 5 | 1 | 3 | 10 | **18** |
| 17. | முல்லைத்தீவு | 1 | 3 | 17 | 10 | 16 | **32** |
| 18. | குருநாகல் | 19 | 54 | 18 | 10 | 41 | **40** |
| 19. | புத்தளம் | 7 | 23 | 16 | 11 | 32 | **59** |
| 20. | அநுராதபுரம் | 35 | 14 | 11 | 14 | 32 | **30** |
| 21. | பொலநறுவை | 7 | 16 | 5 | 7 | 28 | **44** |
| 22. | கேகாலை | 6 | 20 | 9 | 3 | 17 | **20** |
| 23. | இரத்தினபுரி | 29 | 44 | 21 | 27 | 50 | **75** |
| 24. | பதுளை | 6 | 19 | 9 | 3 | 15 | **26** |
| 25. | மொனராகலை | 10 | 12 | 3 | 18 | 13 | **17** |
| | மொத்தம் | 800 | 1089 | 729 | 825 | 1525 | **1688** |

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகளைக் கருத்திற்கொள்ளும் போது, சகல ஆண்டுகளிலும் அதிகமான மேன்முறையீடுகள் மேல் மாகாணத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதோடு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேன்முறையீடுகளின் அதிகரிப்பு 200 ஆகும்.சகல ஆண்டுகளிலும் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திலிருந்தே ஆணைக்குழுவிற்கு அதிகளவான மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேன்முறையீடுகள் 112 ஆல் அதிகரித்துள்ளது.

மேலும், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் சகல மேன்முறையீடுகளினதும் அதிகரிப்பு 10.68% ஆகும்.

**அட்டவணை 3 – 2023 ஆம் ஆண்டின் தகவல் மூலத்தின் அடிப்படையில் மேன்முறையீடுகளை வகைப்படுத்தல்**

| **இல.** | **தகவல் மூலம்** | **மேன்முறையீடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | மனிதவள முகாமைத்துவம் | 228 |
| 2. | காணி மற்றும் ஆதனம் | 260 |
| 3. | நிர்வாக சேவை நடவடிக்கைகள் | 84 |
| 4. | நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் | 33 |
| 5. | உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டம் | 52 |
| 6. | கல்விச் சேவைகள் | 81 |
| 7. | சுற்றுச்சூழல் பாதிப்பு | 15 |
| 8. | பரீட்சை, விசாரணைக் குழு அறிக்கை | 67 |
| 9. | சுகாதாரத் துறை சம்பந்தமான விடயங்கள் | 20 |
| 10. | சட்டம் மற்றும் ஒழுங்கு | 102 |
| 11. | பெறுகை | 16 |
| 12. | பொதுவான விடயங்கள் | 387 |
| 13. | நானாவித தகவல் கோரிக்கைகள் | 343 |
| | மொத்தம் | **1688** |

**அட்டவணை 4 - 2023 ஆம் ஆண்டிற்கான பகிரங்க அதிகாரசபை அடிப்படையிலான மேன்முறையீடுகளின் வகைப்படுத்தல்**

| இல. | பகிரங்க அதிகாரசபை | மேன்முறையீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் அமைச்சு | 361 |
| (ஆ) | பந்தி (உ) வில் குறித்துரைக்கப்பட்ட அந்தளவிற்கு தவிர 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் தவிர்ந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் கீழ் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் குழு அல்லது பதவி | 702 |
| (இ) | அரசாங்கத் திணைக்களம் | 207 |
| (ஈ) | பகிரங்கக் கூட்டுத்தாபனம் | 30 |
| (உ) | எந்தக் கம்பனியில், அரசு அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசும் பகிரங்க கூட்டுத்தாபனமும் பங்குகளின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை ஒன்றாக வைத்திருக்கின்றனவோ, அல்லது, வேறு வகையில் கட்டுப்படுத்துகின்ற அக்கறையைக் கொண்டுள்ளனவோ, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அந்தக் கம்பனியொன்று | 10 |
| (ஊ) | உள்ளூர் அதிகார சபை | 176 |
| (எ) | அரசாங்கத்திடமிருந்து அல்லது அதன் முகவராண்மையிடமிருந்து அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றிடமிருந்து ஒப்பந்தம்,பங்காண்மை உடன்படிக்கை அல்லது உரிமமொன்றின் கீழ் நியதிச்சட்ட அல்லது பகிரங்கப் பணி அல்லது ஒரு நியதிச்சட்ட அல்லது பகிரங்கச் சேவையை நிறைவேற்றுகின்ற தனியாள் அமைப்பு அல்லது ஒழுங்கமைப்பொன்று.ஆனால் நியதிச்சட்ட அல்லது பகிரங்கப் பணி,நியதிச்சட்ட அல்லது பகிரங்க சேவையினால் உள்ளீர்க்கப்படும் தொழிற்பாடுகளின் அந்தளவிற்கு மட்டும் | 27 |
| (ஏ) | மாகாணசபையொன்றினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் திணைக்களம் அல்லது வேறு அதிகாரசபை அல்லது நிறுவனம் | 144 |
| (ஐ) | நாடப்படும் தகவல் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவையுடன் தொடர்புறும் அந்தளவிற்கு பொதுமக்களுக்கு சேவையை வழங்குகின்ற அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் திணைக்களத்தினால் பெருளளவில் நிதியளிக்கப்படுகின்ற அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் அல்லது மாகாணசபையொன்றினால் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட வேறு அதிகாரசபை | 05 |
| (ஒ) | ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற,அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட | 18 |

| | | |
|---|---|---|
| | அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட முறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்தொழில் நிறுவனங்கள் உள்ளடங்கலான உயர்கல்வி நிறுவனங்கள் | |
| (ஓ) | ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அத்துடன் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட முறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் அல்லது தொழிநுட்பக் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கலான தனியார் கல்வி நிறுவனங்கள் | 03 |
| (ஔ) | நீதி நிருவாகத்திற்கென உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட சகல நீதிமன்றங்கள், நியாயசபைகள் மற்றும் நிறுவனங்கள் | 05 |
| | **மொத்தம்** | **1688** |

**அட்டவணை 5 - 2023 ஆம் ஆண்டிற்கான மேன்முறையீடுகளின் மொழி மூலமான வகைப்பாடு**

| **மொழி** | **மேன்முறையீடுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| சிங்களம் | 1149 |
| தமிழ் | 257 |
| ஆங்கிலம் | 282 |
| **மொத்தம்** | **1688** |

## 3.2 மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்

ஆணைக்குழுவிற்கு 2023.01.01ஆம் திகதி முதல் 2023.12.31 ஆம் திகதி வரை 1688 மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றன.2022 ஆம் ஆண்டில் கிடைத்த 414 மேன்முறையீடுகளை அவ்வாண்டில் விசாரணைக்கு உட்படுத்த முடியாமல் போனமையால் 2023 ஆம் ஆண்டில் விசாரணைக்காக உள்ளடக்கப்பட்டது.

அதற்கமைய, 2023 ஆம் ஆண்டில் விசாரணை செய்யத் திட்டமிடப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 2102 ஆகும்.இவற்றுள் கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகளில் 1324 விசாரணை மேற்கொள்ளப்பட்டதோடு ஆணைக்குழுவினால் குறைபாடுகளுடன் கூடியதாக இனங்காணப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 227 ஆகும்.அதேபோல், பகுதியளவு விசாரணை செய்து எதிர்வரும் ஆண்டிற்குத் திகதியிடப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கையானது 64 ஆகவும்,ஒத்திவைக்கப்பட்ட மேன்முறையீடுகள் 21 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் விசாரணைக்கு எடுக்கப்படாது 2024 ஆம் ஆண்டில் விசாரணைக்கு உட்படுத்தி திகதி குறிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 466 ஆகவும் அமைந்தது.

மேலும், 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் விசாரணை செய்யப்பட்ட மேன்முறையீடுகள் உள்ளடங்கலாக 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானம் வழங்கப்பட்ட மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 1501 ஆகும்.இச் சகல மேன்முறையீடுகளின் இறுதித் தீர்மானங்களும் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

**அட்டவனை 6 – 2023 ஆம் ஆண்டிற்கான மேன்முறையீடுகளை விசாரித்தல் (2023.01.01 திகதி தொடக்கம் 2023.12.31 வரை)**

| **கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகள்** | **எண்ணிக்கை** | **விசாரணை செய்யப்பட்ட மேன்முறையீடுகள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| கடந்த ஆண்டில் விசாரணைக்காக கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகள் | 414 | 2023 ஆம் ஆண்டில் விசாரணை செய்த மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 1324 |
| 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்ற மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 1688 | ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகளுடனான மேன்முறையீடுகள்/ முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 227 |
| | | பகுதியளவு விசாரணை செய்து மீள் விசாரணைக்காகத் திகதி குறிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 64 |
| | | ஒத்திவைக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 21 |
| | | 2024 ஆம் ஆண்டிற்கு முன் கொண்டு செல்லப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 466 |
| **மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை** | 2102 | **மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை** | 2102 |
| 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானம் வழங்கப்பட்ட மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | | 1551 |

2017.02.03 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2004/66 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமாணியில் ‘‘2017 ஆம் ஆண்டின் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் சட்டங்கள்’’ எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 20 ஆம் இலக்க விதிமுறைகளில் உள்ளடங்கிய செயன்முறைகளுக்கு இணங்க அனைத்து மேன்முறையீடுகளும் தனிப்பட்ட முறையில் 2023 ஆம் ஆண்டில் விசாரிக்கப்பட்டன.இச் செயற்பாட்டில் 22 ஆம் இலக்க விதிமுறையின் பிரகாரம் அல்லது தனிப்பட்ட முறையில் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவரின் மூலம் அல்லது அந்த மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுக்கும் வேளையில் கானொளிக்காட்சி வசதியிருப்பின் அதனூடாக ஆணைக்குழு முன்னிலையில் தோன்றுவதற்கு மேன்முறையீட்டாளர், அல்லது, பகிரங்க அதிகாரசபைக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.அதேபோல் 2023 ஆம் ஆண்டில் மூன்றாம் காலாண்டிலிருந்து மேல் மாகாணத்திலுள்ள பகிரங்க அதிகாரசபைகளுக்கு மேன்முறையீட்டு விசாரணைக்கு ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றுமாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக மீண்டும் மீண்டும் மேன்முறையீடுகளை ஒத்தி வைக்காது இலகுவாக தீர்மானம் வழங்க முடியுமாக இருந்தது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு விசாரணை நிறைவுற்றவுடன் தேவைக்கேற்ப எழுத்துமூல ஆணைகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அவ்வாறு செயற்பட்டதன் விளைவாக ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வினைதிறனுடனும் பயனுறுதிமிக்க வகையிலும் மேற்கொள்வதற்குப் பங்களிப்பதோடு ஆணைக்குழுவின் தபாற் செலவை முன்னைய வருடங்களுடன் ஒப்பீட்டளவில் குறைக்கவும் முடியுமாக இருந்தது.

# 4. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தலையீடுகள்

## 4.1 உள்நாட்டு தலையீடுகள்

### 4.1.1 அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டின் தகவலுக்கான உரிமை சட்டத்தின் 14(ஊ) பிரிவின் பிரகாரம் கடமைகள் மற்றும் பணிகளின் கீழ் இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறுதிவாய்ந்த விதத்தில் செயற்படுத்த அரச உத்த்யோகத்தர்களுடன் கூட்டாகச் செயற்படுதல் மற்றும் அவ்வுத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தலுக்காக ஆணைக்குழுவினால் 2023 ஆம் ஆண்டில் AFRIEL இளைஞர் வலையமைப்பு மற்றும் இலங்கைப் பத்திரிகைத் தாபனத்தின்(SLPI) நிதியுதவியுடன் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டில் அனைத்து மாகாண சபைகள் மற்றும் அதன் கீழ் இயங்கும் சகல நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள், தகவல் அலுவலர்கள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பானவர்களுக்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம் நடைமுறைக்கு அவசியமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டதோடு, அதற்கமைய, 2023 ஆண்டில் ஆணைக்குழுவினால் மாகாண சபைகள் மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தகவல் அலுவலர்கள், மற்றும், குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள் கீழ்வருமாறு முன்னெடுக்கப்பட்டன.

**அட்டவணை 7 – 2023 ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்பூணர்வூட்டு வேலைத்திட்டம்**

| இல | திகதி | மாவட்டம்/ அமைவிடம் | இலக்குக்குழு/ பங்கேற்பு | நிதிப் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2023.01.24 | கொழும்பு BMICH | இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான கையேடு வெளியிடல் - 60 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 2 | 2023.06.20 | சப்ரகமுவ மாகாணம் - சப்ரகமுவ மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள்- 120 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 3 | 2023.07.04 | மத்திய மாகாணம் - மத்திய மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள் - 190 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 4 | 2023.08.22 | வடமத்திய மாகாணம் - வடமத்திய மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள் - 150 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 5 | 2023.09.05 | கிழக்கு மாகாணம் - கிழக்கு மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள் - 178 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 6 | 2023.09.26 | தென் மாகாணம் - தென் மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள்-241 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 7 | 2023.10.10 | ஊவா மாகாணம் - ஊவா மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள் - 225 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |

| இல | திகதி | மாவட்டம்/ அமைவிடம் | இலக்குக்குழு/ பங்கேற்பு | நிதிப் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 8 | 2023.11.07 | வடமேல் மாகாணம் - வடமேல் மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள் - 250 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 9 | 2023.11.28 | வட மாகாணம் - வட மாகாண சபைக் கட்டடத் தொகுதி | பகிரங்க அதிகாரசபைகளின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் அலுவலர்கள்-140 | அரச நிதி /AFRIEL இளைஞர் வலையமைப்பு |

**அட்டவணை 08- சிவில் அமைப்புக்களை விழிப்புணர்வூட்டல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2023.04.01 | ஹம்பந்தோட்டை- தெஹிகஹலந்த தேசிய பாடசாலை | இளைஞர் குழுக்கள் -150 | AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 2 | 2023.04.08 | கண்டி- டி.எஸ்.சேனநாயக்க வித்தியாலயம் | இளைஞர் குழுக்கள் - 700 | AFRIEL இளைஞர் வலையமைப்பு |
| 3 | 2023.05.06 | வவுனியா - வட மாகாணம் | ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வூட்டல் 30 | SLPI |
| 4 | 2023.08.15 | கண்டி - மத்திய மாகாணம் | ஆய்வறிக்கை சமர்ப்பித்தல் | SLPI |

### 4.1.2 அரச நிறுவனங்கள் தொடர்பில் ஆணைக்குழு உறுப்பினர்களின் வளப் பங்களிப்பு

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 2023 ஆம் ஆண்டில் பல்வேறு அரச நிறுவனங்களால் ஒழுங்கமைக்கப்பட்ட தகவலுக்கான உரிமை விழிப்புணர்வு வேலைத்திட்டங்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களின் வளங்களைப் வழங்கியுள்ளனர்.

**அட்டவணை 9 - 2023 ஆண்டில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் வழங்கப்பட்ட வளப் பங்களிப்பு**

| இல | பகிரங்க அதிகாரசபை | வேலைத்திட்டம் | இடம் | திகதி |
|---|---|---|---|---|
| 1 | வெகுசன ஊடக அமைச்சு | வெகுசன ஊடக அமைச்சின் தகவற் பிரிவிற்கு தந்திரோபாயத் திட்டம் உருவாக்குவதற்கான பயிற்சிப் பட்டறை | கொழும்பு | 2023.01.09 – 10 |
| 2 | வெகுசன ஊடக அமைச்சு | பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்றுவிக்கும் பயிற்சிப் பட்டறை – தமிழ் மொழி | வவுனியா | 2023.03-17- 19 |
| 3 | சிரச தொலைக்காட்சி | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கலந்துரையாடல் | கொழும்பு | 2023.04.21 |
| 4 | SLIT நிறுவனம் | தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பான விரிவுரை | கொழும்பு | 2023.05.08 |
| 5 | நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | தகவல் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் பயிற்சிப்பட்டறை | கொழும்பு | 2023.06.27 |
| 6 | யாழ் தொலைக்காட்சி அலைவரிசை | தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வூட்டல் | கொழும்பு | 2023.09.20 |
| 7 | பிரதமர் அலுவலகம் | அதிகாரிகளை விழிப்புணர்வூட்டல் பயிற்சிப்பட்டறை | கொழும்பு | 2023.10.02 |

### 4.1.3 முற்போக்கான தகவல்களை வெளியிடல்

2023 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைப் பொருளாதார மீளாய்வு நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டிற்கு முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் உள்ளடங்கியுள்ளதோடு சர்வதேச நாணய நிதியத்தினால் தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் சமகால தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பிலான சாதகமான பதில்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.தகவலுக்கான உரிமையைப் பலப்படுத்தும் பொருட்டு சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைய ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாக முற்போக்கான தகவல்களை வெளியிடும் செயலைப் பலப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு அமைச்சரவைக்கு உரித்தான சகல அமைச்சுக்களின் செயலாளர்கள் (குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள்) மற்றும் தகவல் அலுவலர்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு வேலைத்திட்டமும் 2023 டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது.

### 4.2 சர்வதேச மாநாடுகள்

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட நேபாள தேசிய தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகஇவ்வாணைக்குழுவிற்கான் தவிசாளர் மற்றும் ஆணையாளர்களுக்கு அழைப்பு கிடைக்கப் பெற்று 2023 மே மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நேபாளத்திற்குப் பயணிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

இங்கு, நீதிக்காக பிரவேசிக்கும் வாய்ப்புக்களை மேம்படுத்தல், தகவலுக்கான உரிமை மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்தினை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களுக்குரிய ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக நேபாள தேசிய தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஊடாக அழைப்புக் கிடைக்கப் பெற்றது.இப் பயணத்தில் நேபாள தேசிய தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு,மனித உரிமைகள் ஆணைக்குழு,நேபாள ஊடகப் பிரிவு, நீதிபதிகள் சங்கத்தின் சிவில் சமூக ஒழுங்கமைப்பு, பல்கலைக்கழகப் பதவியணியினர்,தகவலுக்கான உரிமை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் வலய மற்றும் மாவட்ட அரச நிறுவனங்களுடன் கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கும், வலயத்தில் சக நிறுவனங்கள் இரண்டிற்கிடையிலும் அனுபவம் மற்றும் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதற்கும் எமக்கு கிடைத்த வாய்ப்பாக அமைந்தது.

2023 ஜுன் 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை மனிலா நகரில் இடம்பெற்ற தகவல் ஆணையாளர்களின் சர்வதேச மாநாட்டில்(ICIC) 14 ஆவது பதிப்பின் போது உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் இலங்கை தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஆணையாளர் செல்வி கிஷாலி பின்டோ கலந்து கொண்டு ‘‘சவாலான உலகம்’’ எனும் தலைப்பில் ஆரம்ப அமர்வில் உரையாற்றினார்.அவர் அக்கூட்டத்தில் தகவல் அறியும் எதிர்காலம் என்ற ஒப்பந்தத்துடன் இலத்தின் அமெரிக்கா,வட அமெரிக்கா,ஆபிரிக்கா,ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியா– சமுத்திர தகவல் ஊடகங்களில் உலகளாவிய மாநாடுகளுடன் தொடர்புடைய தகவல் அணுகல் ஆசிய கூட்டமைப்பினைத் (AAIA) தாபித்தலுக்கு தலைமை அதிதியாத் தேரந்தெடுக்கப்பட்டார்.

## 5. ஆணைக்குழுவின் நீதிமன்ற அலுவல்கள்

ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளால் அதிருப்தியுற்ற எவரேனுமொரு பிரசை/ அல்லது பகிரங்க அதிகாரசபையினால் தகவலுக்கான உரிமை சட்டத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் அத்தீர்மானத்திற்கு எதிராக, அத்தீர்மானம் வழங்கப்பட்டு ஒரு மாதத்தினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய முடியும்.

அதனடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரசைகள் மற்றும் பகிரங்க அதிகாரசபைகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 9- 2023 ஆம் ஆண்டிற்குரிய 34 ஆம் பிரிவின் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்**

| தொடர் இல | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கு இல | ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு இல - RTIC/ Appeal | மேன்முறையீட்டாளர் (மனுதாரர்) | பிரதிவாதி | எதிர்வரும் திகதி மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | **CA/RTI/01/2023** | **580/2021** | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | **1.**அனைத்து நிறுவன ஊழியர் சங்கம்(Inter Company Employees Union)<br>**2.**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 2024.01.16 ஆட்சேபனைகள் |
| 2 | **CA/RTI/02/2023** | **1283/2019** | ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சீ. | **1.**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு<br>**2.**திரு.சீ.ஜே.விஜயவர்தன | 2024.03.11 ஆம் திகதி விசாரணை |
| 3 | **CA/RTI/03/2023** | **713/2022** | ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சீ. | **1.**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு<br>**2.**திரு.சீ.ஜே.விஜயவர்தன | 2024.03.12 ஆம் திகதி விசாரணை |
| 4 | **CA/RTI/04/2023** | **703/2022 / 707/2022 / 708/2022** | ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சீ. | **1.**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு<br>**2.**திரு.பீ.சுரேந்திரன் | 2024.03.12 ஆம் திகதி விசாரணை |
| 5 | **CA/RTI/05/2023** | **2272/2023** | மக்கள் வங்கி | **1.**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு<br>**2.**திரு.எம்.எச்.ஜே.விஜேசேகர | 2024.02.09 ஆம் திகதி விசாரணை |
| 6 | **CA/WRIT/63/2023** | **922/2022** | திரு.நாகானந்த கொடிதுவக்கு | **1.**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு மற்றும் ஏனைய தரப்பினர் | 2023.04.03 ஆம் திகதி மேன்முறையீட்டை விலக்களித்துக் கொள்வதற்கமைவாக தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 7 | **CA/WRIT/200/2023** | **448/2022** | திரு. வைத்தியர் குமாரசிரி மானகே | **1.**திரு.ருக்சான் பர்னாந்துபுள்ளே, தவிசாளர்,பட்டப்பின் வைத்திய கற்கைகள் நிறுவனம் மற்றும் ஏனைய 54 பேர் | இவ் வழக்கில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ஒரு தரப்பினராக இல்லை. |

| தொடர் இல | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கு இல | ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு இல - RTIC/ Appeal | மேன்முறையீட்டாளர் (மனுதாரர்) | பிரதிவாதி | எதிர்வரும் திகதி மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | 2.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு (56 ஆவது பிரதிவாதி) | |
| 8 | CA/WRIT/223/2023 | 1108/2019 மற்றும் 1114/2019 | CHEC Port City Colombo (Pvt) Ltd | 1.திரு.எம்.எப்.ஏ.மன்சூர்<br>2.Center for Environmental Justice (Guarantee) Ltd<br>3.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு மற்றும் ஏனைய 12 பேர் | 2024.01.26 ஆம் திகதி விசாரணை |
| 9 | CA/RTI/06/2023 | 1108/2019 மற்றும் 1114/2019 | CHEC Port City Colombo (Pvt) Ltd | 1.திரு.எம்.எப்.ஏ.மன்சூர்<br>2.Center for Environmental Justice (Guarantee) Ltd<br>3.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு மற்றும் ஏனைய 12 பேர் | 2024.01.10 ஆம் திகதி அழைக்கப் படவுள்ளது. |
| 10 | CA/RTI/07/2023 | 815/2021 | இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் | திரு கமல் விதானகே | இவ் வழக்கில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ஒரு தரப்பினராக இல்லை. |
| 11 | CA/RTI/08/2023 | 17/2023 | இலங்கை கடற்படை(வைஸ் அத்மிரால் பிரியந்த பெரேரா) | 1.ஏ.ஏ.எம்.றிப்தி அலி<br>2.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 2024.02.06 ஆம் திகதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 12 | CA/RTI/09/2023 | 1200/2022 | மக்கள் வங்கி | 1.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு<br>2. திரு.டீ.சரச்சந்திர | 2024.02.06 ஆம் திகதி அழைக்கப் படவுள்ளது. |
| 13 | CA/RTI/10/2023 | 1111/2022 | திரு.நிரோஷ்குமார் | இலங்கை இராணுவம் | இவ் வழக்கில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ஒரு தரப்பினராக இல்லை. |
| 14 | CA/RTI/11/2023 | 444/2023 | திரு.தரிந்து ஜயவர்தன | பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு | இவ் வழக்கில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ஒரு தரப்பினராக இல்லை. |

2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக சட்டத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பான தகவல்கள் பின்வருவன.

**அட்டவணை 10 - 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை 34 ஆம் பிரிவின் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்**

**2018 ஆம் ஆண்டு**

| தொடர் இல | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கு இல | ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு இல - RTIC/ Appeal | மேன்முறையீட்டாளர் (மனுதாரர்) | பிரதிவாதி | எதிர்வரும் திகதி மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | **CA/RTI/01/ 2018 (REV)** | **58/2018** | மக்கள் வங்கி | 1. இலங்கை வங்கி ஊழியர் சங்கம் (Ceylon Bank Employees' Union)<br>2.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 2024.10.13 ஆம் திகதி மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| 2 | **CA/RTI/02/ 2018** | **117/2018** | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 1.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு<br>2.திரு.வீ.வை. சபாரத்தினம் | 2019.08.11 ஆம் திகதி மனுதாரரினால் மேன்முறையீடு விலக்களித்துக் கொள்ளப்பட்டது. |
| 3 | **CA/RTI/03/ 2018** | **25/2018 26/2018** | நிதிச் சபை, இலங்கை மத்திய வங்கி | 1.Verite Research (Pvt) Ltd<br>2.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 2024.01.16 விசாரணை.<br>தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் வழக்கு நடவடிக்கைக்கு இணங்க நீதிமன்றத்தினால் வெளியிடப் பட்டுள்ளது. |

**2019 ஆம் ஆண்டு**

| தொடர் இல | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கு இல | ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு இல - RTIC/ Appeal | மேன்முறையீட்டாளர் (மனுதாரர்) | பிரதிவாதி | எதிர்வரும் திகதி மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | **CA/RTI/01/ 2019 (REV)** | **06/2017** | திரு.ஈ.எம்.எஸ்.பீ.ஏக நாயக்க | 1.Transparency International Sri Lanka<br>2.தகவலுக்கான உரிமை ஆணைக்குழு மற்றும் ஏனையோர் | 2024.01.31 விசாரணை<br>தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் வழக்கு நடவடிக்கைக்கு இணங்க நீதிமன்றத்தினால் வெளியிடப் பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | **CA/WRI52/ 2019** | **97/2017** | திரு.எஸ்.எம். மனோஜ் பிரசன்ன | தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 2023.03.26 ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது. |

**2020 ஆம் ஆண்டு**

| **தொடர் இல** | **மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கு இல** | **ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு இல - RTIC/ Appeal** | **மேன்முறையீட்டாளர் (மனுதாரர்)** | **பிரதிவாதி** | **எதிர்வரும் திகதி மற்றும் நடவடிக்கைகள்** |
|---|---|---|---|---|---|
| 1 | **CA/RTI/01/ 2020 (REV)** | **766/2018** | திரு.ஹேவா பத்தகே குணரத்ன | தகவலுக்கான உரிமை ஆணைக்குழு | 2024.01.12 ஆம் திகதி விசாரணை |

**2021 ஆம் ஆண்டு**

| | | பிரதம செயலாளர் அலுவலகம் வட மாகாணம் - பிரதிச் செயலாளர் அலுவலகம் பொறியியலாளர் சேவை - மாகாண சபை கட்டிடத் | |

| இல | 43 ஆம் பிரிவின் பிரகாரம் வகைப்படுத்தல் | பகிரங்க அதிகார சபை வகைப்படுத்தல் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | தொகுதி | |
| | | மாகாண கல்வித் திணைக்களம் - மேல் மாகாணம் | |
| | | பிரதம செயலாளர் அலுவலகம் - வடமாகாண சபை | |
| | | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு - சப்ரகமுவ மாகாண சபை | |
| | | ஊவா மாகாண சபை - ஊவா மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் | |
| | | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு (தென் மாகாணம்) | |
| | | விவசாயம், விவசாய உற்பத்திகள், விற்பனை, கால்நடை உற்பத்திகள், கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்வள அமைச்சு - வட மத்திய மாகாணம். | |
| | | பிரதம செயலாளர் அலுவலகம் வட மாகாண சபை - மாகாண உள்ளக கணக்காய்வு அலுவலகம் | |
| | | மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் - வட மத்திய மாகாணம் | |
| | | பிரதம செயலாளர் அலுவலகம் - வடமேல் மாகாணம் | |
| | | பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | |
| (ஐ) | நாடப்படும் தகவல் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவையுடன் தொடர்புறும் அந்தளவிற்கு பொதுமக்களுக்கு சேவையை வழங்குகின்ற அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் திணைக்களத்தினால் பொருளளவில் நிதியளிக்கப்படுகின்ற அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் அல்லது மாகாணசபையொன்றினால் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட வேறு அதிகாரசபை | | 0 |

| இல | 43 ஆம் பிரிவின் பிரகாரம் வகைப்படுத்தல் | பகிரங்க அதிகார சபை வகைப்படுத்தல் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| (ஒ) | ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அங்கீகரிக்கப்படுகின்ற, அல்லது, உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட முறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்தொழில் நிறுவனங்கள் உள்ளடங்கலான உயர்கல்வி நிறுவனங்கள் | | 0 |
| (ஓ) | ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அத்துடன் அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட முறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள் உள்ளடங்களாக தனியார் கல்வி நிறுவனங்கள் | | 0 |
| (ஔ) | நீதி நிருவாகத்திற்கென உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட எல்லா நீதிமன்றங்கள்,நியாயசபைகள் மற்றும் நிறுவனங்கள் | | 0 |
| | மொத்தம் | | **150** |

## 7. தகவலுக்கான அணுகல் தொடர்பான சர்வதேச தினத்தை கொண்டாடுதல் - International Day for Universal Accesses to Information

2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் ஒழுங்கமைக்கப்பட்டு சர்வதேச தகவல் தினம் கொண்டாடப்பட்டது. இருப்பினும், அத்தினமானது 2019 ஆம் ஆண்டிலிருந்து தகவலுக்கான அணுகல் தினம் என்று பெயரிடப்பட்டதுடன் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவும் 2017ஆம் ஆண்டு முதல் இத்தினத்தைக் கொண்டாடுகின்றது.

2023 ஆம் ஆண்டில் 26 உலக நாடுகளுடன் இணைந்து தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவானது,இச் சர்வதேச தினத்தை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கொண்டாடுகின்றது.

ஆணைக்குழுவானது இந்த ஆண்டுக்கான தகவல் அணுகல் தொடர்பான சர்வதேச தினத்தை உத்தியோகபூர்வமான முறையில் களுத்துறை மாவட்ட செயலகத்தில் கொண்டாடியது.இதில் அரச துறை போல் சிவில் பிரசைகளுக்கு தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்பட்டதோடு அதற்கு நிறுவனங்களாக தென் மாகாண சபைக்கு உரித்தான சகல நிறுவனங்களினதும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் தகவல் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு மேலதிகமாக யாழ் தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டலானது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்,ஆணையாளரான சட்டத்தரணி திரு.ஜகத் லியன ஆரச்சி இனால் மேற்கொள்ளப்பட்டது.

தகவலுக்கான உரிமைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு யுனெஸ்கோ அனுசரனையில் புதுடில்லியில் 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் 28 ஆம் திகதி தகவல் அணுகல் சர்வதேச தினம்(IDUAI) நிகழ்நிலை வலயக் கொண்டாட்டமாக இடம்பெற்றது.இச் சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், ஆணையாளரான சட்டத்தரணி செல்வி கிஷாலி பின்டோ ஜயவர்தன "சீர்த்திருத்தத்தைப் பாதுகாத்தல்" எனும் தலைப்பில் தலைமை உரையொன்றை நிகழ்நிலை ஊடாக நடாத்தினார்.

# 8. நிர்வாகம் மற்றும் நிதிசார் செயலாற்றுகை

இக் காலகட்டத்தில் சட்டத்திற்கிணங்க ஆணைக்குழுவின் கடமைகளும் செயற்பாடுகளும் வளப்பற்றாக்குறையுடனும் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலும் மேற்கொள்ளப்பட்டன. ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்ட மேன்முறையீடுகளது வேலைப்பலுவிளையும் மனித,நிதி மற்றும் பௌதீக வளங்கள் அற்ற நிலையிலும் சட்டத்திற்கிணங்க பல தடவைகள் நீதிமன்றத்தில் முன்தோன்றுமாறு கோரப்பட்டதையும் நிர்வகித்துள்ளது.

## 8.1 ஆணைக்குழுவின் பதவியணியினர்

ஆணைக்குழுவின் பதவியணியினர் பத்துப் பேர் மட்டுமேயாகும்.ஆணைக்குழு தனது சட்டபூர்வ ஆணையின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாகத் தேவைப்படும் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக பல கோரிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் முன்வைத்த போதிலும் அது பலனளிக்கவில்லை.

| பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் | தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் | 01 | - |
| ஆய்வு உத்தியோகத்தர் | 01 | 01 |
| சட்ட உத்தியோகத்தர் | 01 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 |
| நிதி உத்தியோகத்தர் | 01 | 01 |
| சட்ட உதவியாளர் | 04 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 | 01 |
| மொழிபெயர்ப்பாளர்(தமிழ்) | 01 | - |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 04 | 01 |
| பிரத்தியேக உதவியாளர் | 01 | 01 |
| சாரதி | 03 | 01 |
| அலுவலக உதவியாளர் | 02 | 01 |
| **மொத்தம்** | **26** | **10** |

2023 ஆம் ஆண்டில் அரச சேவை ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்யும் போது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் ஊடாக இவ்வாணைக்குழுவில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.அதற்கமைவாக வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

## 8.2 நிதிக்கட்டுப்பாடு

ஆணைக்குழுவின் மொத்த நிதியை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

| செலவினம் | வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு | மொத்தச் செலவினம் | செலவின சதவீதம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 43,970,000.00 | 43,903,489.47 | 99% |
| மூலதன செலவினம் | 1,500,000.00 | 1,498,771.20 | 100% |
| மொத்த செலவினம் | 45,470,000.00 | 45,247,109.09 | 99% |

# தகவலுக்கான உரிமை ஆணைக்குழு
## 2023 ஆம் ஆண்டிற்கான டிசெம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமைக்கூற்று

| | குறிப்பு | 12/31/2023 ரூபாய் | 12/31/2022 ரூபாய் |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம் பொறி உபகரணம் | | 10,362,332.90 | 10,362,332.90 |
| (-) திரண்ட பெறுமானத் தேய்வு | | (3,246,924.29) | (1,702,466.65) |
| **மொத்த சொத்துக்கள்** | **1** | **7,115,408.61** | **8,659,866.25** |
| | | | |
| **உரிமையான்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **உரிமையான்மை** | | | |
| கூறப்பட்ட முலதனம் | | 10,362,332.90 | 10,362,332.90 |
| நிறுத்தி வைத்த இலாபம் | | (3,802,075.87) | (1,986,092.22) |
| **மொத்த உரிமையான்மை** | | **6,560,257.03** | **8,376,240.68** |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| ஏற்பாடுகள் | **2** | 400,000.00 | - |
| ஏனைய கொடுப்பனவுகள் | **3** | 155,151.58 | 283,625.57 |
| | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **7,115,408.61** | **8,659,866.25** |

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் என்பவற்றால் வகுக்கப்பட்ட அரச துறை கணக்கியல் தரநியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

## தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

### 31.12.2023 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று

| 31.12.2023 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | | குறிப்பு | | 2023 (ரூபாய்) | 2022 (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | |
| அரச நிதி | | | | 45,470,000.00 | 36,728,635.92 |
| **கழி** அரச வருமானம் வெகுசன ஊடக அமைச்சிற்கு மீளளிப்பு | | | | (1,228.80) | (4,190.16) |
| **கூட்டு** ஏனைய வருமானம் | | | | 61,963.46 | 19,248.00 |
| | | | | **45,530,734.66** | **36,743,693.76** |
| **ஏனைய வருமானம்** | | | | | |
| வருமதி வருமானம் | | | | - | 57,797.00 |
| மொத்த வருமானம் | | **4** | | **45,530,734.66** | **36,801,490.76** |
| **செயற்பாட்டு வருமானம்** | | | | | |
| அங்கத்தவர்களதும் பதவியணியினரதும் செலவுகள் | | **5** | | (15,545,373.11) | (15,772,395.86) |
| எழுதுகருவிகள் | | | | (1,193,358.45) | (1,167,197.07) |
| எரிபொருள் | | | | (398,700.00) | (360,493.02) |
| உணவு மற்றும் சீருடை | | | | (451,480.01) | (259,977.48) |
| பராமரிப்பு செலவுகள் | | | | (414,051.53) | (311,877.64) |
| தபால் மற்றும் தொடர்பாடல் | | | | (1,222,689.91) | (1,077,494.90) |
| வாடகை மற்றும் உள்ளக வரி | | **6** | | (14,724,278.37) | (12,819,900.27) |
| வாகனங்களுக்கான குத்தகைக் கட்டணம் | | **7** | | (6,325,353.84) | (4,365,913.16) |
| சட்ட நிகழ்ச்சித்திட்ட செலவு | | **8** | | (1,498,771.20) | (57,797.00) |
| ஏனைய நிர்வாகச் செலவு | | **9** | | (1,168,858.98) | (818,832.60) |
| ஏனைய செலவுகள் | | **10** | | (653,217.10) | |
| சட்டச் செலவுகள் | | | | (2,206,128.17) | |
| நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு | | **11** | | (1,544,457.64) | (1,702,466.65) |
| | | | | (47,346,718.31) | (38,714,345.65) |
| **ஆண்டிற்க்கான மிகை/குறை** | | **12** | | **(1,815,983.65)** | **(1,912,854.89)** |

## தகவலுக்கான உரிமை ஆணைக்குழு
## 2023 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கான உரிமை மாற்றல் கூற்று

| | 2022 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மூலதன நிதி (ரூபாய்) | மிகை/குறை (ரூபாய்) | மொத்தம் (ரூபாய்) | | மூலதன நிதி (ரூபாய்) | மிகை/குறை (ரூபாய்) | மொத்தம் (ரூபாய்) |
| 01.01.2022 ஆம் திகதிய மீதி | | 9,441,683.90 | (73,237.33) | 9,368,446.57 | 01.01.2023 ஆம் திகதிய மீதி | 10,362,332.90 | (1,986,092.22) | 8,376,240.68 |
| ஆண்டிற்கான மூலதன நிதி | | 920,649.00 | | 920,649.00 | ஆண்டிற்கான மூலதன நிதி | - | - | - |
| மிகை/குறை | | | (1,912,854.89) | (1,912,854.89) | மிகை/குறை | - | (1,815,983.65) | (1,815,983.65) |
| 31.12.2022 ஆம் திகதிய மீதி | குறிப்பு 01 | **10,362,332.90** | **(1,986,092.22)** | **8,376,240.68** | 31.12.2023 ஆம் திகதிய மீதி | **10,362,332.90** | **(3,802,075.87)** | **6,560,257.03** |

## தகவலுக்கான உரிமை ஆணைக்குழு
## 2023 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான | குறிப்பு | 2023 (ரூபாய்) | 2022 (ரூபாய்) |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் | | | |
| ஆண்டிற்கான தேறிய அதிகரிப்பு/குறைவு | | (1,815,983.65) | (1,912,854.89) |
| சீராக்கல்கள் | | | |
| பெறுமானத்தேய்வு | | 1,544,457.64 | 1,702,466.65 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | | **(271,526.01)** | **(210,388.24)** |
| தொழிற்பாட்டு மூலதன சீராக்கல்கள் | | | |
| ஏற்பாடுகளின் தேறிய அதிகரிப்பு/குறைவு | | 400,000.00 | - |
| அட்டுறு தொலைபேசி கட்டணத்தின் (தேறிய) அதிகரிப்பு/குறைவு | 12 | 26,629.39 | (21,847.98) |
| அட்டுறு மேலதிக நேர கொடுப்பனவின் (தேறிய) அதிகரிப்பு/குறைவு | 12 | (16,461.72) | (17,970.83) |
| அட்டுறு போக்குவரத்து கொடுப்பனவின் அதிகரிப்பு/குறைவு | | 300.00 | - |
| அட்டுறு பயிற்சிப்படிகளின் தேறிய அதிகரிப்பு/குறைவு | 12 | (1,000.00) | (1,500.00) |
| அட்டுறு பத்திரிகைக் கொடுப்பனவின் அதிகரிப்பு/குறைவு | | (16,530.00) | 16,530.00 |
| அட்டுறு நீர் கொடுப்பனவின் அதிகரிப்பு/குறைவு | | (1,900.00) | 1,900.00 |
| அட்டுறு வாடகைக் கொடுப்பனவின் அதிகரிப்பு/குறைவு | | (233,277.05) | 233,277.05 |
| அட்டுறு சட்டக் கட்டணத்தின் அதிகரிப்பு/குறைவு | | 113,765.39 | - |
| செயற்பாட்டு நடவடிக்கைகளின தேறிய காசுப்பாய்ச்சல் | | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் | | | |
| ஆதனம் பொறி உபகரணம் கொள்வனவு | | - | **(920,649.00)** |
| முதலீட்டு நடவடிக்கைகளின தேறிய காசுப்பாய்ச்சல் | | - | |
| நிதியீட்ட நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் | | | |
| கூறப்பட்ட மூலதன அதிகரிப்பு | | - | 920,649.00 |
| நிதியீட்ட நடவடிக்கைகளின தேறிய காசுப்பாய்ச்சல் | | | - |
| காசு.காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்டுள்ள தேறிய அதிகரிப்பு/குறைவு | | - | - |
| இறுதிக் காசு காசுக்கு சமனான உருப்படிகளின் மீதி | | - | - |

# தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

## நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான பொதுவான தகவல்கள்

1. **பொதுவான தகவல்**
   தகவலுக்கான உரிமை ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சுயாதீன சட்டபூர்வமான ஆணைக்குழுவாகும்.இவ்வாணைக்குழுவின் தூரநோக்கானது பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மை,பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை ஊக்குவித்தல்,ஊழலை எதிர்த்தல்,பொறுப்புக்கூறலை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவதாகும்.

   ஆணைக்குழுவானது நான்கு ஆணையாளர்களையும் அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒரு தவிசாளரையும் அதன் பணிப்பாளர் நாயகமான ஆணைக்குழுவில் பிரதம நிறைவேற்று அதிகாரி தற்போது பத்து பேரைக் கொண்ட குழுவை உள்ளடக்கியது.31.12.2023 ஆம் ஆண்டில் மொத்த அங்கீகரிக்கப்பட்டட பதவியணியினர் 26 ஆகும். இதற்கிணங்க,அத்திகதியில் 16 உத்தியோகத்தர்களது பற்றாக்குறை காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் பதவி வெற்றிடங்களுக்குரிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

   2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவிற்கு மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2. **நிதிநிலைமைக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் ஏற்றுக் கொள்வதற்கான அடிப்படை**
   இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அரச துறை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க ஆணைக்குழு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கிறது.

3. **தயாரிப்பதற்கான அடிப்படை**
   2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 17 இன் படி ஆணைக்குழு அதன் கணக்குகளை தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்தினைக்களத்திற்கு சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளது. உரிய மாற்றங்களுக்கு உட்பட்டு 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 18 இன் படி, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் நிதிச் சட்டத்தின் பகுதி இரண்டில் உள்ள ஏற்பாடுகள், நிதிக்கட்டுப்பாடு மற்றும் ஆணைக்குழுவின் பராமரிப்பு தொடர்பாகவும் பொருந்தும்.

   இந்நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.இக் கொள்கைகளில் மாற்றம் குறிப்பிடப்பாதிருப்பின் அனைத்து ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக அக் கொள்கைகளே பயன்படுத்தப்படுகின்றன.

   ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கியல் தரநியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது வரலாற்று கிரயத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

   நிதிக்கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கு எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் தயாரிக்கப்பட்டுள்ளன.

4. **பணம்**

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள உருப்படிகள், அந்த நிறுவனம் செயற்படும் முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகிறது ("செயற்பாட்டு நாணயம்"). நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன,இது ஆணைக்குழுவின் செயற்பாட்டு மற்றும் வழங்கல் நாணயமாகும்.

5. **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வரலாற்று கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்றுச் செலவு என்பது பொருட்களைப் பெறுவதற்கு நேரடியாகக் காரணமான செலவினங்களை உள்ளடக்கியது.

6. **காசும் காசுக்கு சமமானவை**

31 டிசம்பர் 2023 வங்கி அறிக்கைகளின்படி, இலங்கை வங்கி டொரிங்டன் கிளையின் வங்கி மீதி ரூ. 0.00

7. **அட்டுறு/பொறுப்புகள்**

அட்டுறு கணக்குகள் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கடன் கொடுனர் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

8. **நிதி**

ஆணைக்குழு அரசிடமிருந்து நிதியாக 45,468,771.20 ரூபாயை 2023 ஆம் ஆண்டில் பெற்றுள்ளது.

9. **செலவினங்களுக்கான கணக்கீடு**

ஆணைக்குழுவின் அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படும் அனைத்து செலவுகளும் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

10. **காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்று நேரில் முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. காசும் காசுக்கு சமமானவை வங்கி நடைமுறைக் கணக்கையும் உள்ளடக்கியுள்ளது.

# நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள்

1. சொத்துக்கள்

| | 2022 | | | | | 2023 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலக உபகரணம் | கணனி | தொடர்பாடல் சாதனங்கள் | தளபாடங்கள் | மொத்தம் | அலுவலக உபகரணம் | fzdp | தொடர்பாடல் சாதனங்கள் | தளபாடங்கள் | மொத்தம் |
| ஆரம்ப மீதி | 1,355,078.90 | 5,503,154.66 | 724,749.10 | 1,858,701.24 | 9,441,683.90 | 1,525,977.90 | 6,042,154.66 | 733,174.10 | 2,061,026.24 | 10,362,332.90 |
| சேர்ப்புக்கள் | 170,899.00 | 539,000.00 | 8,425.00 | 202,325.00 | 920,649.00 | - | - | - | - | - |
| இறுதி மீதி | **1525,977.90** | **6,042,154.66** | **733,174.10** | **2,061,026.24** | **10,362,332.90** | **1,525,977.90** | **6,042,154.66** | **733,174.10** | **2,061,026.24** | **10,362,332.90** |
| ஆண்டிற்கான திரண்ட பெறுமானத் தேய்வு | - | - | - | - | - | 271,015.78 | 1,100,630.93 | 144,949.82 | 185,870.12 | 1,702,466.65 |
| ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு | 271,015.78 | 1,100,630.93 | 144,949.82 | 185,870.12 | 1,702,466.65 | 250,992.42 | 988,304.75 | 117,644.86 | 187,515.61 | 1,544,457.64 |
| 31.12 இல் திரண்ட பெறுமானத் தேய்வு | 271,015.78 | 1,100,630.93 | 144,949.82 | 185,870.12 | 1,702,466.65 | 522,008.20 | 2,088,935.68 | 262,594.68 | 373,385.73 | 3,246,924.29 |
| தேறிய சொத்துக்கள் | **1,254,962.12** | **4,941,523.73** | **588,224.28** | **1,875,156.12** | **8,659,866.25** | **1,003,969.70** | **3,953,218.98** | **470,579.42** | **1,687,640.51** | **7,115,408.61** |

**2. ஏற்பாடுகள்**

2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டண ஏற்பாடுகள் - 400,000 ரூபாய்

**3. ஏனைய நிலுவைகள் (31.12.2023 ஆம் திகதியில்)**

| | ரூபாய் |
|---|---|
| அட்டுறு தொலைபேசிக் கட்டணம் | 33,233.97 |
| அட்டுறு மேலதிகநேரக் கட்டணம் | 7,852.22 |
| அட்டுறு போக்குவரத்துக் கட்டணம் | 300.00 |
| அட்டுறு சட்டக் கட்டணம் | 113,765.39 |
| **மொத்தம்** | **155,151.58** |

**4. அரச நிதி**

| | |
|---|---|
| 2023 ஆம் ஆண்டில் நிதிக் கிடைப்பனவு | 45,470,000.00 |
| வெகுசன ஊடக அமைச்சிற்கு நிதி மீளளிப்பு | (1228.80) |
| ஏனைய வருமானங்கள் | 61963.46 |
| **மொத்த வருமானம்** | **45,530,734.66** |

**5. ஆளனியினது செலவுகள்**

| | |
|---|---|
| ஆளணியினரது ஊதியம் | 12,911,400.83 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 715,706.80 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 178,926.75 |
| மாதாந்தபடிகள் | 592,500.00 |
| மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 780,588.73 |
| ஏனைய படிகள் | 3,750.00 |
| பயிற்சிப் படிகள் | 362,500.00 |
| **மொத்த வருமானம்** | **15,545,373.11** |

**6. வாடகை மற்றும் உள்ளக வரி**

பதினொரு அறைகளுக்குமான மாதாந்த கட்டட வாடகை 1,166,772.13 ரூபாய் ஆகும். தகவலுக்கான உரிமை ஆணைக்கழு BMICH வளாகத்தின் கட்டட இலக்கம் 02 இல் இயங்கி வருகின்றது.

**7. வாகனங்களுக்கான குத்தகைக் கட்டணம்**

ஆணைக்குழு பின்வரும் வாகனங்களை சென்ரல் பினான்ஸ் கம்பனி (PLC) இலிருந்து செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் குத்தகை செய்துள்ளது.2023 ஆம் ஆண்டிற்கான வாகனங்களுக்கான குத்தகைக் கட்டணச் தொகையாக 6,325,353.84 ரூபாய்.

| **2023.04.25 வரை** | **2023.04.25 தொடக்கம் 2028.04.25** |
|---|---|
| ISUZU- Double Cab (WPPI 7233) | Honda – VEZEL (WPCAZ 4364) |
| **2023.04.25 வரை** | **2023.04.25 தொடக்கம் 2028.04.25** |
| Honda – VEZEL (WPCAZ 4364) | Van (WPNC 9740) |

8. **சட்ட நிகழ்ச்சித்திட்ட செலவுகள்**

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட சகல சட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் இச் செலவு உள்ளடக்கும்.

**9. ஏனைய நிர்வாக செலவுகள்**

| | |
|---|---|
| போக்குவரத்து செலவுகள் | 59,333.98 |
| சீருடை | 4,000.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,105,525.00 |
| **மொத்தம்** | **1,168,858,98** |

**10. ஏனைய செலவுகள்**

| | |
|---|---|
| நீர் | 141,444.06 |
| பத்திரிகை | 100,730.00 |
| விளம்பரம் | 311,029.00 |
| ஏனைய செலவுகள் | 100,014.04 |
| **மொத்தம்** | **653,217.10** |

**11. நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு**

தகவலுக்கான உரிமை ஆணைக்குழு கொள்வனவு ஆண்டைத் தவிர, முன்னைய ஆண்டிலிருந்து (2022) நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்ய தீர்மானித்துள்ளது.அத்தகைய கொள்கைக்கிணங்க 2023 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு சதவீதம் மற்றும் பெறுமானத்தேய்வு தொகைகளும் பின்வருமாறு.

| சொத்தின் வகை | தேறிய சொத்துப் பெறுமதி | பெறுமானத்தேய்வு சதவீதம் | பெறுமானத்தேய்வுத் தொகை |
|---|---|---|---|
| **அலுவலக உபகரணம்** | 1,254,962.12 | 20% | 250,992.42 |
| **கணனி** | 4941,523.73 | 20% | 988,304.75 |
| **தொடர்பாடல் சாதனம்** | 588,224.28 | 20% | 117,644.86 |
| **தளபாடம்** | 1,875,156.12 | 10% | 187,515.61 |
| **மொத்தம்** | **8,659,866.25** | | **1,544,457.64** |

**12. தேறிய குறை**

திரண்ட நிலுவைத் தொகையான 271,526.01 ரூபாய் மற்றும் பெறுமானத் தேய்வுத் தொகையான 1,544,457.64 ரூபாய் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்றில் பற்றாக்குறையாக (1,815,983.65 ரூபாய்) காட்டப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகம்
தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் 2023 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் விரிவான வருமானக்கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய குறிப்புக்களை உள்ளடக்கி நிதிக் கூற்றுகூற்றுகளுடன் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் சீர்த்திருத்தத்துடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.அரசியலமைப்பின் 154(6)ஆம் சீர்த்திருத்தத்தின் பிரகாரம் காலக்கிரமத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர,ஆணைக்குழுவின் நிதி நிலைமைக்கூற்றின் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மைத்தன்மையையும் நியாயமானதன்மையையும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஆணைக்குழுவினால் குறைந்து செல்லும் மீதி முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தாலும் அது இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 86(ஆ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) முந்தைய ஆண்டுகளில் பெறப்பட்ட ரூ. 10,362,333 மொத்த மூலதன மானியங்கள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன்(திருத்திய) பிரகாரம் வருமானத்தில் சேர்க்கப்படாமல், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மூலதனமாகக் காட்டப்பட்டுள்ளமையினால் நிதிநிலை அறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிறுத்தி வைக்கப்பட்ட வருவாயிலிருந்து அந்தத் தொகையை விடக் குறைவாகவும், குறிப்பிடப்பட்ட மூலதன இருப்பு அந்தத் தொகையை விட அதிகமாகவும் காட்டப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு(இ.க.நி.) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.இக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள்,இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பிலான

கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் எடுக்கப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என கருத்திற் கொள்ளப்படும்.இவ் ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடங்கப்படாதிருப்பதுடன் நான் அது தொடர்பாக எவ்வித சான்றிதலொன்றோ அபிப்பிராயத்தையோ வெளியிடமாட்டேன்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்குரிய, எனது பொறுப்பாக மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியுமாக உள்ள போது வாசிப்பு மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்துகின்றதா என்பதை கருதுவதற்காகும்.

ஆணைக்குழுவின் 2023 இற்குரிய ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் பொருண்மையான அளவில் தவறாக குறிப்பிட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், சீராக்குவதற்காக ஆளுகைத் தரப்பினருக்கு அவ்விடயத்தை தெரிவிக்க வேண்டும்.மேலும் சீராக்காமல் தவறுதலாக குறிப்பிட்டிருந்தால், அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் சீர்த்திருத்தத்தின் பிரகாரம் என்னால் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளினால் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது ஆணைக்குழுவினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கல் எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் தொடர்பான செயன்முறையை பரிசீலிக்கும் பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகளையும் அறிக்கைளையும் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களை உள்ளடக்கியதான உறுதிப்படுத்தலோன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் எழக்கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மைத்தன்மை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது ஏற்படும் தாக்கங்களின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பிரிவொன்றாக என்னால்

கணக்காய்வின் போது தொழில்முறைத் தீர்ப்பையும் தொழில்முறை ஐயுறவையம் பயன்படுத்தினேன்.மேலும் என்னால்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்தின் இனங்காணுதல் மற்றும் மதிப்பிடுவதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் ஏற்படும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு,தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறன் தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீட்டுகளின் நியாயமானதன்மை மற்றும் ஒருங்கிணைந்த வெளிப்படுத்தல்கள் முகாமைத்துவத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் சந்தேகம் இருப்பின் பெற்றுக் கொண்ட

கணக்காய்வு ஆதாரங்களின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பில் நிறுவனங்களின் தொடர்ந்தியங்குதல் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.பொருண்மையான சந்தேகம் ஏற்படின் நிதிக்கூற்றுக்களின் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுவதாக முடிவு செய்து, அவ் வெளிப்படுத்தல்கள் போதியதாக இல்லாதிருப்பின் என்னுடைய அபிப்பிராயத்தை சீரமைத்தல் வேண்டும்.எவ்வாறாயினும்,எதிர்கால நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்தியங்கல் முடிவுறுத்தப்பட முடியும்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களுக்கு மற்றும் நிகழ்வுகளுக்கு பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது மற்றும் வெளிப்படுத்தல்களை அடக்கிய நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்த முன்வைப்பு மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வின் கண்டுபிடிப்புக்கள்,பிரதம உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக் தொடர்புடைய தரப்பினருக்கு தெரியப்படுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடு தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1. எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் எனும் அடிப்படைப் பிரிவில் விளக்கப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் எனது பரிசீலனையின் போது வெளிப்படுத்தப்பட்ட உரிய நிதியறிக்கைகளை ஆணைக்குழு பேணியிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ)(iii) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(i)(ஈ)(iv) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் எனும் அடிப்படைப் பகுதியில் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர முந்தைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டு நிதியறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் மூலம் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம், கீழே குறிப்பிட்டு வெளிப்படுத்தி காட்டும் அளவிற்கு எந்தவொன்றும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினர் ஒருவருக்கு ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கையுடன் நேரடியாகவோ அல்லது வேறு ஏதேனும் சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாக.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புகள் தவிர உரிய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்டுள்ள பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக.

| **சட்டங்கள் விதிகள்/ என்பவற்றுடன் தொடர்பு** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இல.01/2021 அரச நிதிச் சுற்றறிக்கை | ஆணைக்குழுவினால் 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வருடாந்த இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ)2021 நவம்பர் 16 ஆந் திகதி 01/2021 ஆம் இலக்க அரச முயற்சியாளர்களுக்கான நிறுவனத்தின் நல்லாட்சி தொடர்பான வழிகாட்டல்களின் 4.4 ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு உரிய ஏற்பாடுகளுக்கமைய இன்று வரை உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ)2021 நவம்பர் 16 ஆம் திகதி 2021/01 இலக்க அரச வியாபார திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அரச முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவு | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையை கணக்காளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள்(05 மாதங்கள்) க்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தாலும் இவ்வறிக்கையின் ஆம் திகதியும் ஆணைக்குழுவினால் 2023 ஆம் ஆண்டிற்குரிய வரைவு ஆண்டறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்தாலும் ஆணைக்குழுவினால் 2021 மற்றும் 2022 ஆம் அண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் வளங்களை சிக்கனமாகவும் செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும்

காலவரையறைகளினுள்ளும் ஏற்புடைய சட்டங்களுக்கிணங்க பெறுகை செய்து பயன்படுத்தவில்லையெனவும்

## 2.3 ஏனைய விடயங்கள்

அ. பாராளுமன்றத்தின் பரிந்துரையின் பேரில், ஜனாதிபதி தவிசாளர் உட்பட 5 உறுப்பினர்களையும் ஆணைக்குழுவிற்கு நியமிப்பார். 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணிப்பாளர் நாயகமாக இருப்பதோடு மேலும் ஆணைக்குழுவின் பணிகளை நடத்துவதற்குத் தேவையானதாகக் கருதப்படும் எண்ணிக்கையிலான அதிகாரிகளையும் ஊழியர்களையும் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டும். அதற்கமைவாக, 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 26 ஆக இருந்ததலும் ஆனால் உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்தமையினால் 16 வெற்றிடங்கள் காணப்பட்டன.

ஆ. ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆரம்பத்திலிருந்தே நிரந்தர அதிகாரியும் நியமிக்கப்படவில்லை என்பதோடு அப்பதவி ஒப்பந்த அடிப்படையிலும் தற்காலிக அடிப்படையிலும் நிரப்பப்பட்டது. மேலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி சிரேஷ்ட ஆய்வு அதிகாரி, சட்ட அதிகாரி மற்றும் 04 சட்ட உதவியாளர் ஆகிய பதவிகளில் நிலவிய வெற்றிடங்கள் காணப்பட்டமை ஆணைக்குழுவின் செயற்பாட்டைப் பாதிக்கக்கூடும் என்பதைத் கணக்காய்வால் நிராகரிக்க முடியாது.

இ. கடந்த ஆண்டில் ரூ. 51,500 க்கு வாங்கப்பட்ட கைரேகை இயந்திரத்தின் வருடாந்திர பராமரிப்புப் பணி தொடர்பாக ஆணைக்குழுவிற்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கும் இடையே ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவில்லை.மேலும், அந்த இயந்திரத்திடமிருந்து வருகை மற்றும் புறப்பாடு நேரப் பதிவேடுகள் பெறப்படாததால், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2024 ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் இந்த இயந்திரம் செயலிழந்துவிட்டது.

டப்ளியு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி